திரு பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மக்கள் கோயில்களுக்குச் சென்று மொட்டை அடித்துக்கொள்கிறார்கள். பெண்கள் முடிகள் நல்ல உரமாக இருப்பதால், அதை நிலத்தில் போட்டு உரமாகப் பயன் படுத்தலாம் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். இதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முடிகளைக் கொண்டு சவுரிகளாகவும், டோப்பாக்களாகவும் செய்து நல்ல முறையில் விற்பனை செய்கிறார்கள். இந்த முடிகளில் அதிகம் உரம் இருப்பதாகச் சொன்னார்கள். உரம் இருக்கிறது. ஆனால் 1 முதல் 2 சதவீதம் வரைதான் நைட்ரஜன் இருக்கிறது. ஆகவே, இதை உரமாக உபயோகிக்கின்ற எண்ணம் இல்லை.

State Transport buses plying in Mylapore area

* 517 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether a number of buses plying in Mylapore area were diverted from their normal routes during the first half of April 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கோவில் ஆண்டு பிரம்மோத்சவத் திருவிழாவின் போது 1—4—1971 முதல் 10—4—1971 வரையில் 'லஸ்' முதல் மந்தைவெளி அஞ்சல் நிலையம் வரையுள்ள இராமகிருஷ்ணர் மடம் சாலையில் பேருந்து போக்குவரத்துக்குக் காவலர்கள் தடை விதித்ததால் பத்தொன்பது வழித்தடப் பேருந்துகளை வேறுவழித் தடங்களில் திருப்பி விட வேண்டிய தாயிற்று. இவ்வாறு வேறு வழித்தடங்களில் பேருந்துகளைத் திருப்பிவிடுவது ஆண்டுதோறும் நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சியே.

Complaint book in State Transport Buses

* 518 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state whether suggestions and complaints books are readily made available for the use of the passengers in all State Express Buses?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

DR. H. V. HANDE : Sir, is it a fact that complaints have been received that there are no complaint books in some of the buses and if so, what is the action taken by the Government to see that such complaints are not received hereafter?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேருந்துக்கும், நெடுந்தொலைவு பேருந்துக்கும் புகார் புத்தகம் வைக்கப் பட்டுள்ளது. புகார் புத்தகம் வைக்கப்படவில்லையென்கிற எந்தப் புகாரும் வரவில்லை. இந்தப் புகார்களை நானே நேரில் பார்த்து ஆய்வு செய்கிறேன். அதில் நல்ல ஆலோசனைகளைக்கூட எடுத்துச் சொல்கிறார்கள்.